Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 73/2022

**2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 8 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | துணை வட்டாட்சியர் (தேர்தல்) |
| பெயர் | - | செந்தில்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஆலப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை | வயது | - | 53 |
| சாதி | - | - | | | |

**(2 எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. 1வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது)**

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்பொழுது வால்பாறை தேர்தல் துணை வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் வால்பாறை வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்தேன். 01.02.2022 அன்று மாலை 03.15 மணியளவில் வால்பாறை வட்டாட்சியர் உத்தரவின்படி தலனார் எஸ்டேட்டில் ஒரு திருட்டுப் பொருளை எடுக்கவேண்டும் அதற்கு நீங்கள் உடனிருக்கவேண்டும் என்று வால்பாறை காவல் ஆய்வாளர் சொன்னார்.

2. அதற்கிணங்க நானும், வால்பாறை கிராம உதவியாளர் ஈஸ்வரனும், காவல் ஆய்வாளருடன் சென்றோம். தலனார் தொடக்கப்பள்ளிக்கு அருகிலுள்ள தொழிலாளர் குடியிருப்பில் ஆஜர் எதிரியான பார்த்திபன் என்பவர் வீட்டில் எங்கள் முன்னிலையில் 2 கட்டில், 1 பெட், 2 பிளாஸ்டிக் சேர் ஆகியவைகள் எடுக்கப்பட்டது.

3. எங்களிடம் விசாரணை செய்தார்கள். நாங்கள் மகஜர் மாதிரி எழுதிக்கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **அந்த மகஜர் அ.சா.ஆ.6 ஆகும்.**

4. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ. 7 ஆகும்.** அதில் ஆஜர் எதிரியிடம் விசாரணை செய்தபோது அவர் எடுத்துக்கொண்டதை ஒப்புக்கொண்டார். அவர் கட்டில், மெத்தை, சேர், சமையல் சாமான்கள், ஒரு மின்மோட்டார்

ஆகியவைகளை எடுத்துக்கொண்டதாக எங்கள் முன்னிலையில் ஒப்புக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. என்னுடைய அலுவலகம் வால்பாறையில் உள்ளதென்றால் சரிதான். எங்களுடைய அலுவலகத்திலிருந்து என்னுடைய முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடம் தோராயமாக 13 கி.மீ தொலைவில் உள்ளது.

2. தலனார் பஸ்ஸ்டாப்பும், ஸ்கூல் பகுதியும் வெவ்வேறு பகுதி என்றால் ஒரு 50 அடி தொலைவில் உள்ளது. ஆய்வாளர் எங்கள் அலுவலகத்திலிருந்து அழைத்ததின்பேரில் ஒன்றாகத்தான் சென்றோமா என்றால் ஆய்வாளர் வட்டாட்சியரிடம் வந்து சொன்னார். வட்டாட்சியர் உத்தரவின்பேரில் நாங்கள் அவருடம் சென்றோம்.

3. என்னை என்ன காரணத்திற்காக அழைத்துச்செல்கிறோம் என்பதைக் கூறி அழைத்துச்சென்றார்களா என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான்அந்த இடத்திற்குச் செல்லும்போது ஏற்கனவே ஆய்வாளர் ஒரு நபரைப் பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார் என்று சொல்லியிருந்தால் அது சரியா தவறா என்றால் சரிதான்.

4. கவர்கல்லிலிருந்து தலனார் போகும்வழியில் ஒரு வனச்சோதனை சாவடி உள்ளதென்றால் நினைவில்லை. முதன்முதலாக தேசிய அளவில் கொரோனா ஊரடங்கு 25.03.2020 -ல் அமல்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

5. அந்த தேதிக்கு பிறகு மக்கள் நடமாட்டம் வெளியில் இருக்ககூடாது என்றால் சரிதான். அந்த சமயத்தில் மாவட்டத்திற்குள்ளே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல அத்தியாவசிய தேவைகள், மருத்துவ உதவிகள் தவிர மற்றவற்றிற்கு மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி தேவை என்றால் சரிதான்.

6.நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மற்றும் நான் குறிப்பிட்டுள்ள பொருள்களை ஒரு நபரால் வாகன உதவியின்றி எடுத்துச்செல்ல முடியாது என்றால் அது பற்றி நான் சொல்லமுடியாது.

7. நான் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் மகஜர் தற்போது என்னிடம் காட்டப்படும் மகஜர் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் இது இல்லையென்றால் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை நான் எழுதவில்லை மகஜரில் கையெத்து இட்டதைத்தான் நான் சொல்கிறேன்.

8. நான் கையெப்பம் இட்டதாக சொல்லப்படும் இடத்தில் கடைகளோ, ஜெராக்ஸ் , கம்யூட்டர் பிரிண்ட் எடுக்கும் இடம் இல்லையென்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் ஆவணம் ஏற்கனவே காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டு, அங்கு கையொப்பமிடப்பட்டது என்றால் இல்லை.

9. நான் ஆய்வாளருடன் எந்த இடத்திற்கும் செல்லவில்லையென்றாலும், என் முன்னிலையில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும், அவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அதனடிப்படையில் எந்தப்பொருளையும் கைப்பற்றப்படவில்லை

என்றாலும் பொருட்களை எடுத்தது உண்மைதான்.

10. நான் அரசு அலுவலர் என்பதால் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை: இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் ) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 73/2022**

**2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 9 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 9 | தொழில் | - | கிராம உதவியாளர் |
| பெயர் | - | ஈஸ்வரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | வீரன் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை | வயது | - | 55 |
| சாதி | - | - | | | |

**(2 எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. 1வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்பொழுது வால்பாறை தெற்கு கிராம நிர்வாக அலுவலகத்தில் நிர்வாக அலுவலரிடம் கிராம உதவியாளராக பணியாற்றி வருகிறேன். 01.02.2022 அன்று நானும், செந்தில்குமார் நிலவருவாய் ஆய்வாளர் அவர்களும் அலுவலகத்திலிருக்கும் போது மாலை 3.00 மணியிருக்கும் வட்டாட்சியர் எங்களிடம் இதுமாதிரி வால்பாறை காவல் ஆய்வாளர் ஒரு கேஸ் சம்மந்தமாக பொருளை சீஸ் பண்ணவேண்டும் அதை எடுப்பதற்கு இரண்டு பேர் சாட்சி வேண்டுமென்று கேட்டதன்பேரில் வட்டாட்சியர் உத்தரவின்படி நாங்கள் இருவரும் தலனார் எஸ்டேட் என்ற இடத்திற்கு போனோம்.

2. அங்கு பள்ளிக்கூடத்திற்கு அருகில் பார்த்திபன் வீட்டிற்கு கூட்டிப்போய் பொருளிருக்கிறது அப்படின்னு வீட்டிற்கு கூப்பிட்டு போனார்கள். பார்த்திபன் இங்கிருக்கிறாறா என்று தெரியவில்லை. அங்கு 2 இரும்பு கட்டில், 2 சேர், 1 பெட் ஆகியவற்றை வீட்டிலிருந்து எடுத்துக்கொடுத்தார்.

3. அதை ஒரு பொலிரோ பிக்கப் வேனில் எடுத்துவைத்தார்கள். அது சம்மந்தமாக எங்கள் முன்னிலையில் எடுத்தார்கள் என்று சொல்லி எங்களை சாட்சி கையெழுத்து போடச்சொன்னார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள 2-வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த மகஜரிலுள்ள 2-வது கையொப்பம் அ.சா.ஆ.8 ஆகும்.**

4. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2-வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2-வது கையொப்பம் அ.சா.ஆ. 9**

**ஆகும்.** வால்பாறை ஸ்டேஷனில் வைத்து மகஜரிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையெழுத்து போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை: இல்லை**

**மறுவிசாரணை: இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.